பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 15 திங்கட்கிழமை 28.04.2025 கதிர் 170

### இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலின் போதும் நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இருந்தவாறான நிலமை வடக்கு கிழக்கில் என்பிபிக்கு இப்போது இல்லை. உள்ளாட்சித் ☞ 2

# தேசிய மக்கள் சக்தியின் சபாநாயகரைபோல் எமது கட்சியினர் ஊழலேதும் செய்யவில்லை

## சுன்னாகத்தில் சுமந்திரன் ஜனாதிபதிக்கு சாட்டையடி



தேசிய மக்கள் சக்தி நியமித்த சபாநாயகர் போல் எங்கள் கட்சியினர் ஊழல்செய்யவில்லை. ஜனாதிபதியிடம் நேரடியாகவே கேட்கின்றேன் இங்கு யார் ஊழல்வாதி? உங்களுடைய கட்சியிலிருந்து நீங்கள் தெரிவு செய்த சபாநாயகர் ஊழல்வாதியா இல்லையா? இன்றுவரை சபாநாயகரின் கல்வித்தமை வெளிப்படுத்தப்படவில்லை. பொய்யான கல்வித் தகமையைக் காட்டி ஜனநாதிபதியின் சகாதான் சபாநாயகரானார். பின் அவருடைய கல்வித் தகைமை சவாலுக்கு உட்படுத்தப்பட்டவுடன் பதவி விலகுவதாகச் சொன்னார். ஆறு மாதங்களாகிவிட்டன. இன்னமும்பட்டச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை. அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்துநீக்குங்கள். நீதிமன்றில் இருந்து களவு வழக்கிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக இருக்கின்றார்கள். இவற்றைஎல்லாம்வைத்துக்கொண்டு எங்களுக்கு ஊழல் பற்றி அநுர பிரசங்கம் செய்கின்றார் - என்று சுன்னாகத்தில் நேற்று ஆவேசமாகப் பொங்கினார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன். ☞ 2

# சிங்கள மயமாக்கலைத் தொடர்கிறது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும்

## சாணக்கியன் எம்.பி. சுன்னாகத்தில் குற்றச்சாட்டு
## யாழ். மக்களுக்கு மானப்பிரச்சினையான தேர்தல் என்றும் தெரிவிப்பு

என்.பி.பி. அரசு கடந்தகால ஆளும்தரப்புக்களைவிட மிக மோசமாகச்செயற்படுகின்றது. தேர்தல் சட்டங்களைமீறிச்செயற்படுகின்றது. வவுனியாவைத்தியசாலைக்குச்சென்ற சுகாதாரஅமைச்சர்நளிந்தஜெயதிஸ்ஸ தேர்தல் விதிகளை மீறியிருக்கிறார். கிழக்குப்பல்கலைக்கழகப்பேரவைக்கு சிங்கள பெரும்பான்மையினரையே நியமித்திருக்கிறார்கள். இந்த ஆளும்தரப்பு சிங்களமயமாக்கலை தொடர்கின்றது என்று நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.



சுன்னாகத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ☞ 2

# ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறந்தால் உடற்கூறாய்வு கட்டாயம்

ஐந்துவயதுக்குட்பட்டகுழந்தைகளின் அனைத்து இறப்புகளும் இனிமேல் கட்டாய உடற்கூறாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இறப்புவிசாரணை அதிகாரிகளுக்கு வெளியிடப்பட்டசுற்றறிக்கையில், ☞ 8

# தேசபந்துவிற்கு எதிரான விசாரணைக்கு உதவ நால்வர் பொலிஸ் அணி நியமனம்

பணி இடை நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன்மீதானகுற்றச்சாட்டுகளை விசாரிக்கும் உச்ச நீதிமன்ற நீதியரசர் பிரீதிபத்மன்சூரசேனதலைமையிலான மூன்று பேர் கொண்ட குழுவிற்கு உதவ, குற்றப் புலனாய்வுத் துறையின் உதவி காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்டநான்குஉறுப்பினர்களைபதில் பொலிஸ் மா அதிபர் நியமித்துள்ளார்.

மூவர் விசாரணைக் குழுவிற்கு உதவ, கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மற்றும் துணை சொலிசிட்டர் ஜெனரல் ராஜித பெரேரா ஆகியோரை சட்டமா அதிபர் ஏற்கனவே நியமித்துள்ளார். இவர்களுக்கு மேலதிகமாக விசாரணைக்கு உதவ பொலிஸ் குழு ஒன்றை ☞ 2

# அடுத்த ஆண்டு முதல் தொல்லை இல்லா கல்வி

## இப்படி உறுதியளிக்கிறார் பிரதமர்

குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு தொந்தரவு இல்லாத கல்வி முறை 2026 முதல் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு தொடங்கப்படும் என்றும், இது ஒரு புகழடைவதற்கான அல்லது தேர்தல் திட்டம்அல்லஎன்றும், கல்வியைமேம்படுத்துவதற்கான ஒரு உண்மையான நடவடிக்கை என்றும் பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வது முறையாக நடக்கவில்லை என்றும், எதிர்காலத்தில், வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு இடம்பெறும் என்றும் பிரதமர் கூறினார்.

குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹவெல, வீரம்புகெதர, பிதுருவெல்ல, பில்லஸ்ஸ, மாவதகம மற்றும் பரகஹதெனிய பகுதிகளில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் போது பிரதமர் இவ்வாறு கூறினார்.

# டிசெம்பருக்குள் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி

## ஐ.தே.க. தலைவர் எதிர்வுகூறல்

நவம்பர், -டிசெம்பர் மாதத்திற்குள் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

தனக்குத் தெரிந்த பொருளாதாரத்தின்படி, அது நிச்சயமாக நடக்கும் என்று அபேவர்தன கூறினார். இருப்பினும், மக்கள் அதைப் பற்றி பயப்படத் தேவையில்லை என்றும், 'இலங்கை வீழ்ச்சியடையும்போது நாங்கள் அதைப் பார்த்துக்கொள்வோம்' என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாடு வீழ்ச்சியடையும்போது அதைக் காப்பாற்ற முன்வருவேன் என்றும் வஜிர அபேவர்தன கூறினார். காலி தலப்பிட்டி பிரிவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய வஜிர அபேவர்தன இவ்வாறு கூறினார்.

# மாகாணத் தேர்தலை நடத்த வசதியாக சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுங்கள்

## மேலதிக தேர்தல் ஆணையாளர் வலியுறுத்து

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டத்திருத்தத்தை ஆளும் தரப்பு நிறைவேற்றித் தரவேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படையான தேர்தலைநடத்துவதற்குநாம்தயாராகவே இருக்கின்றோம் என்று தேர்தல்கள் திணைக்களத்தின்மேலதிகஆணையாளர் அச்சுதன் தெரிவித்தார்.

"ஒவ்வொரு முறையும் மாறி மாறி வருகின்ற ஆளும்தரப்புக்களிடம் இது தொடர்பான சட்ட ஏற்பாட்டைச் செய்து தருமாறு நாங்கள் கோரிக்கை விடுத்து வருகிறோம். ஒன்று எல்லை நிர்ணய அறிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லதுபழையமுறைமையில்தேர்தலை நடத்துவதற்கு ஒரு பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுங்கள் என்றுகேட்கின்றோம்" என்றார் அச்சுதன்.

2014ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் இன்னும் நடத்தப்படவில்லை. மாகாணசபைகளின் காலம் முடிவடைந்தாலும் தேர்தல்கள் நடத்தப்படாமல் உள்ளது. இது ☞ 8

# ஆளும்தரப்பின் திறமையால் கண்டி நகரமே குப்பை மேடு

## குற்றஞ்சாட்டுகிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் திறமையால் கண்டி நகரம் முழுவதும் குப்பை மேடாக மாறிவிட்டது என்று குற்றஞ்சாட்டினார் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான லக்ஷ்மன் கிரியெல்ல.

எங்கும்குவிந்துள்ளமலம், சிறுநீர் உள்ளிட்ட குப்பைகளால் பல்வேறு நோய்கள் பரவ வாய்ப்புள்ளதாகவும், கண்டி நகரம் ஒரு பரந்த நரகமாக மாறும் என்றும் அவர் கூறினார்.

முன் தயாரிப்பு இல்லாமல் ஆளும்தரப்பு தலதா விபாசனைக்கு தயாரானதால் இந்தப் பிரச்சினைகள் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் என்பிபி என்கிற ஜேவிபியும் நேரடியாக ஒருவரோடு ஒருவர் முட்டிமோதும் நிலமைக்கு வந்துள்ளனர். சூடாகியிருக்கும் தேர்தல் களத்தில் என்பிபி இப்போதுதான் உண்மையான சவாலை வடக்குகிழக்கில் சந்திக்கத் தொடங்கியிருக்கிறது. கடந்த வருடம் நடந்த இரு தேர்தல்களிலும் தமிழ்க்கட்சிகள் என்பிபிக்கு எதிராக இவ்வளவு பெரிய போரைத் தொடுக்காத காரணத்தால், அவர்களுடன் சேர்ந்துகொண்டால் ஏதோ தாங்களும் நல்லவர்கள், தூய்மைவாதிகள் என்று நினைத்துக்கொண்டு அவர்களோடு சேர்ந்த உள்ளாட்சித் தேர்தல் கேட்கத் துணிந்தவர்களில் பலரும் இப்போது 'பம்மத்' தொடங்கிவிட்டார்கள். அதற்குக் காரணம் அவர்கள் செல்லும் இடமெல்லாம் இப்போது அவர்களை மக்கள் துரோகிகளாகப் பார்க்கத் தொடங்கிவிட்டனர் என்பதுதான். அது மட்டுமல்ல அவர்களின் முகத்திற்நேராகவே கேள்விகளையும் கேட்கத் தொடங்கிவிட்டனர்.

இதற்கு முக்கியமான காரணம் தமிழ் மக்களுக்கும் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கும் எதிராகவும் போரை ஆதரித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற பெயரிலும் இன்றைய ஜனாதிபதி அநுர, அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, சந்திரசேகரன் உள்ளிட்ட பலரும் செய்த அட்டூழியங்கள், அராஜகங்கள் எல்லாம் காணொலிவடிவில் சமூகஊடகங்களில் தீயாய் பரவி வருவதுதான். இன்றைய இளவல்கள் பலருக்கும், என்பிபியை உண்மையில் தூய்மைவாதிகள் என்று நம்பியிருந்த பலருக்கும் இந்தக் காணொலிகள் அவர்களது சுயரூபத்தைப் புட்டுப்புட்டு வைக்கின்றன.

இதனால் திணறிப் போயிருக்கும் ஆளும்கட்சியினர் இப்போது என்ன செய்வது என்றுதெரியாமல் ஆடிப்போயிருக்கின்றார்கள். இந்தத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் தமக்குப் பின்னடைவு ஏற்பட்டால் அது மானப் பிரச்சினை என்ற ரீதியில் அமைச்சர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இங்கு தேர்தல் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. துரதிரஸ்டவசமாக கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னின்று உழைத்தவர்களும் போரை நடத்தியே ஆகவேண்டும், சமாதான உடன்படிக்கையை முறித்தெறி என்று நின்றவர்களும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடித்தேயாக வேண்டும் என்றும் முன்னின்றவர்களுமே இங்கு தேர்தல் பணிகளை முன்னெடுக்கும் முதன்மைப் பேர்வழிகள் என்பதால் அவர்களின் தேர்தல் பணிகள் முன்னோக்கி நகர்வதற்குப் பதில் பின்னோக்கியே நகர்கின்றன. மக்கள் அவர்களில் இருந்து அந்நியப்படத் தொடங்கியிருக்கின்றனர்.

இவர்கள் வேடதாரிகள், முதலில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற தமிழர்களைக் கொல்வதில் பிடிவாதமாக இருந்தார்கள், இப்போது சிங்கள வாக்குகள் கிட்டியதும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற ஒரு நாடகம் போடத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள். அதனால் சில மாதங்களுக்கு முன்னர் வரைக்கும் தாங்கள் என்பிபியில் போட்டியிடுகின்றோம் என்று நெஞ்சைநிமிர்த்தியவர்களைஎல்லாம் இப்போது எங்கே என்று தேடவேண்டியிருக்கிறது என்கிறார்கள். பாவம் அவர்கள், அறியாப் பிள்ளைகள் அவர்களை மன்னித்துவிடுங்கள்.

.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிங்கள....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழனத்திற்கு முக்கியமான தேர்தலாக இந்தத் தேர்தல் இருக்கின்றது. யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு மானப் பிரச்சினையாக இந்தத் தேர்தலை பார்க்கின்றேன். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் உலகம் முழுவதும் கேள்வியை எழுப்பியுள்ளன. இதனை நிவர்த்தி செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்த மாற்றத்தைக் காட்ட தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். வேறு கட்சிகளுக்கு வழங்கப்படும் வாக்குகள் வீணாகவே போகக்கூடும்.

என்.பி.பி. அரசு கடந்தகால ஆளும்தரப்புக்களைவிட மிக மோசமாகச் செயற்படுகின்றது. தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுகின்றது. வவுனியா வைத்தியசாலைக்குச் சென்ற சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தேர்தல் விதிகளை மீறியிருக்கிறார். கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவைக்கு சிங்கள பெரும்பான்மையினரையே நியமித்திருக்கிறார்கள். இந்த ஆளும்தரப்பு சிங்களமயமாக்கலை தொடர்கின்றது.

தேர்தல் காலங்களில் மாத்திரமே தமிழ் மக்களுக்கும் தமிழ் பிரதிநிதிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதன்பின் தமிழர்களைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. தேசிய மக்கள் சக்தியின் கைகளில் உள்ளூராட்சி சபைகள் சென்றால் உதாரணமாக கே.கே.எஸ். வீதியை ஏ.கே.டி. வீதியாகக்கூட மாற்றக்கூடும். அவ்வாறு மாற்றினால் நாடாளுமன்ற உறுப்பினர்களால்கூட எதிர்த்துக் கதைக்க முடியாது. உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களும் எதிர்த்து கதைக்க முடியாது. எல்லா முடிவுகளையும் பிமல் ரத்தநாயக்கவும், ரில்வின் சில்வாவுமே எடுப்பார்கள்.

நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் பேச எழுந்து நின்றால் 'நாங்கள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள்' என தேசிய மக்கள் சக்தியினர் கூறுகின்றனர். ஆனால் அவர்களின் கட்சியிலிருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அவர்கள் ஆலோசனைகூட பெறுவதில்லை. அவர்களுக்கு வாக்களித்தர் இந்த நிலைமைதான் உள்ளூராட்சி சபைகளிலும் தொடரும். கிழக்கு மாகாண சபையில் பிள்ளையான் ஆட்சி செய்தபோது மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. கொழும்பிலிருந்து வரும் கட்டளைகளுக்கு ஏற்ப அவர் செயற்பட்டார். அதைப் போலவே தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றாலும் நடைபெறும்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இராஜினாமாக் கடிதத்தை பெற்றிருக்கின்றார்கள் என்று தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக யாழ் மாவட்டத்தில் தெரிவாகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இராஜினாமாக் கடிதம் பெறப்பட இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அது உண்மையாகவும் இருக்கலாம். நாடாளுமன்றத்தில் அவர்கள் பேசுவதைக் காண முடிவதில்லை.

ஜனாதிபதி இன்று தங்கள் கட்சியில்தான் ஊழல்வாதிகள் இல்லை என்கிறார். ஆனால் மட்டக்களப்பில் வீதி மின் விளக்குகளை பொருத்துவதற்கு மதுபானப்போத்தல் கேட்கும் முன்னாள் உறுப்பினர் ஒருவர் அவர்கள் கட்சியில் போட்டியிடுகின்றார். இவ்வாறான வேட்பாளர்களை வைத்துக்கொண்டு ஊழல் பற்றி ஜனாதிபதி பேசுகின்றார்.

ஜனாதிபதிக்கு இன்றைய நாளுக்கான பொய்கள் பட்டியல் என ஒரு பட்டியல் வழங்கப்படும். அவர் அதனை வாசித்துவிட்டு போகின்றார். அவர் கூறும் அத்தனையும் நடைமுறைப்படுத்த முடியாத பொய்கள். நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் சிறிதேனும் தெரிந்திருந்தால் இவ்வாறான பொய்கள் வழங்கப்பட்டிருக்கா.

அதுபோல் பிமல் ரத்நாயக்கவும் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றார். தீவுப் பகுதிகளுக்கு சென்று குடிதண்ணீர் தருவதாக மக்களின் வாக்குகளை பெறப் பொய் சொல்கின்றார். ஆனால் வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

ஏனைய தமிழ்க் கட்சிகளை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் ஏனைய தமிழ்க்கட்சிகள் எங்களை விமர்சிக்கின்றார்கள். மட்டக்களப்பு மண்டூரில் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கிறார். கிழக்கில் பிள்ளையானுக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் வடக்கு, கிழக்கில் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் பாடம் புகட்டியிருக்கலாம். அதைவிடுத்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியை விமர்சிப்பது ஏன்? நாங்களும் கட்சியின் கட்டளையை மீறி பதிலுக்கு விமர்சிக்க வேண்டிவரும். எனவே யாழ்ப்பாணத்திலிருந்து எச்சரிக்கையாகக் கூறுகின்றேன். உங்கள் கட்சிக் கொள்கையைச் சொல்லி வாக்குக் கேளுங்கள்.

நாங்கள் பொது எதிரியாக தேசிய மக்கள் சக்தியியை பார்க்கின்றோம். ஆனால் சிங்கள தேசிய கட்சிகள் ஆட்சி செய்தாலும் பரவாயில்லை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குப் பாடம் புகட்டவேண்டும் என்று நிற்கும் கட்சிகளிடம் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். - என்றார்

## தேசிய மக்கள்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் கூட்டங்களில் தேர்தல் இலஞ்சம், முறையற்ற அழுத்தம் என்பன தொடர்மில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், ஆணைக்குழு எதுவும் செய்கின்றதாக இல்லை.

பிரதமர் ஹரிணி அமரசூரிய இங்கே வந்தபோது கோயில் வளாகத்திலே தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெறுகின்றது எனச் சொல்லி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தபோது (இதனை ஆணைக்குழுவுக்குச் சொல்கின்றேன்) தேர்தல்கள் ஆணைக் குழுவின் உத்தியோகத்தர்கள் அங்கே போனார்கள். போனவர்களைப் பிரதமரின் காவலாளிகள் உள்ளே போகவிடவில்லை. இதனால் திரும்பி வந்துவிட்டீர்கள். நீங்கள் என்ன ஆணைக்குழு? உங்களையா நாங்கள் தேர்தல்கள் ஆணைக் குழுவென்று அரசமைப்பையும் திருத்தி, உங்களுக்கு இத்தனை அதிகாரங்களையும் கொடுத்து வைத்திருக்கின்றோம்?

ஆணைக்குழுவுக்கு முதுகெலும்பு இருந்தால் உடனடியாக இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான அதிகாரம் இருக்கின்றது. தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனே காவல்படை, பொலிஸ் முழுவதும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வர வேண்டும் எனச் சட்டம் சொல்கின்றது - அரசமைப்புச் சொல்கின்றது. ஆனால், அந்த அதிகாரத்தையும் பாவிக்காமல் சுயாதீன ஆணைக்குழு என்று ஒரு பெயரையும் சூட்டி வைத்துக்கொண்டு எந்தவித சுயாதீனமும் கிடையாது. இங்கே மிக முறையற்ற விதத்திலே பரப்புரைகள் எல்லாம் நடக்கின்றன. அதைத் தட்டிக் கேட்க அவர்களுக்கு முதுகெலும்பு இல்லை.

அரசு இத்தனை காலமும் எல்லாம் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ஊழலுக்கு எதிரானவர்கள் என்றனர். ஆனால், தற்போது அப்பட்டமாகவே தெரிகின்றது. நாம் நினைத்தோம் ஒரு இரண்டு வருடம் தேவையாக இருக்கும், கோட்டபாய அரசைப் போன்று இரண்டு ஆண்டுகள் தேவை என்று. ஆனால், இவர்களுக்கு இரண்டு வருடங்கள் கூடத் தேவையில்லை. ஆறுமாதங்களிலேயே சிவப்புச் சாயம் வெளுத்துவிட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பக்கம் செல்லக்கூடாது என்ற அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசு, தற்போது ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் செய்த ஒப்பந்தத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் தொடர்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இந்த ஒப்பந்தத்தில் இருந்த பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினோம். தேசியமக்கள்சக்தியினரும் கண்டித்திருந்தனர்.

ரணில் அரசு உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ஊழியர் சேபலாப நிதியைக் கையாண்டமை தொடர்பில் இன்று அரசில் பிரதி அமைச்சராக இருக்கின்ற ஒருவர் அன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். நான் அவருக்குச் சட்டத்தரணியாக ஆஜராகியிருந்தேன். அவர்கள் ஆட்சிக்கு வந்தபின் இப்போது எதையும் மாற்றவில்லை. ரணில் விக்கிரமசிங்க செய்த ஒப்பந்தத்தையே தொடர்கின்றனர். அதனால்தான் ரணில் விக்கிரமசிங்கவே இது எல்-போர்ட் அரசு என்கிறார்.

எங்களுடைய கட்சி சார்பில் உள்ளூராட்சி சபையைக் கைப்பற்றப் போகின்றவர்கள் எல்-போர்ட் அரசியல்வாதிகள் அல்லர். எங்களிடம் அனுபவம் வாய்ந்த தவிசாளர்கள் இருக்கின்றார்கள். எல்-போர்ட் அரசியல்வாதிகள் என்றால் யார் என்பதை தேசிய மக்கள் சக்தி சார்பாக யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அவதானித்தால் புரியும். அதில் வைத்தியர் ஒருவர் இருக்கின்றார். அவர் வாயைக்கூட திறப்பதில்லை. மற்றைய இரண்டு எம்.பிக்களும் இனிமேல்தான் பேசுவதற்குப் பழகவேண்டும். சபையில் மக்களுடன் எவ்வாறு பேசவேண்டும் என்பதை அறியாதவர்கள். அமைச்சர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் 'சும்மா இருடா' என்கிறார். அவர்கள் சொல்வது எங்களுக்கும் புரியவில்லை.

அவர்களுக்கும் புரியவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஓர் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. அது யாழ்ப்பாணம் மக்களுக்குத். தற்போது தெளிவாகத் தெரிகின்றது. கல்விக்குப் பெயர் போன யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வாறான பிரதிநிதிகள் நாடாளுமன்றம் சென்றிருக்கின்றார்கள். எனினும், அதனைத் திருத்தியமைப்பதற்கான சந்தர்ப்பம் உடனடியாகவே உள்ளூராட்சி சபைத். தேர்தலிலேயே கிடைத்திருக்கின்றது. ஜனாதிபதி ஊழலை ஒழிப்போம் என்று கூறிவிட்டு, வேறு கட்சிகள் ஆட்சியமைத்தால் பத்து தடவைகள் சிந்தித்தே நிதி வழங்குவோம் என்கிறார். ஊழல்வாதிகளுக்குப் பணம் கொடுக்க மாட்டோம் என்கின்றனர். இங்கு யார் ஊழல் செய்தது? தமிழரசுக் கட்சியின் ஆளுகையின்கீழ் இருந்தஎந்தச்சபையிலாவது ஊழல் இடம்பெற்றதா?

தேசிய மக்கள் சக்தி நியமித்த சபாநாயகர் போல் எங்கள் கட்சி ஊழல் செய்யவில்லை. இன்றுவரை சபாநாயகரின் கல்வித்தமை வெளிப்படுத்தப்படவில்லை. பொய்யான கல்வித் தகமையைக் காட்டி சபாநாயகரானார். பின் அவருடைய கல்வித் தகைமை சவாலுக்கு உட்படுத்தப்பட்டவுடன் பதவி விலகுவதாகச் சொன்னார். ஆறு மாதங்களாகிவிட்டன. இன்னமும் பட்டச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை. ஜனாதிபதியிடம் நேரடியாகவே கேட்கின்றேன் இங்கு யார் ஊழல்வாதி? உங்களுடைய கட்சியிலிருந்து நீங்கள் தெரிவு செய்த சபாநாயகர் ஊழல்வாதியா? இல்லையா? அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குங்கள்.

நீதிமன்றில் இருந்து களவு வழக்கிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக இருக்கின்றார்கள். இவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு எங்களுக்கு அநுர பிரசங்கம் செய்கின்றார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 25 சதவீதமான வாக்குகளைப்பெற்ற தேசிய மக்கள் சக்தியினர் 3 ஆசனங்களைப் பெற்றிருந்தார்கள். அந்த அசம்பாவிதம் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் நிகழக்கூடாது என்பதற்காக ஏனைய தமிழ்க் கட்சிகளை விமர்சிப்பதில்லை என்று தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளோம்.

நாங்கள்தான் பெரிய தமிழ்க் கட்சி. நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இருந்தாலும் இந்த உதிரி தமிழ்க் கட்சிகளை நாங்கள் விமர்சிக்கப்போவதில்லை. ஆனால், அந்தக் கட்சிகள் என்னையே தாக்குகின்றன. இதைவிடுத்து எங்கள் இனத்துக்கு ஆபத்தாக மாறியிருக்கின்ற அரச கட்சியை விமர்சியுங்கள்.

இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியானது 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இருந்து. தற்போது 159 ஆசனங்களுடன் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றார்கள்.

பழைய ஊழல் அரசியல்வாதிகளை விரட்ட வேண்டும் என்ற மக்கள் மனதில் இருந்த ஆதங்கத்தின் பயனை இவர்கள் அடைந்திருக்கின்றார்கள். கோட்டாபய துரத்தியடிக்கப்பட்டதுபோல் இவர்களும் மிக விரைவில் துரத்தியடிக்கப்படுவார்கள்.

நாடு யாருடனும் இருக்கட்டும். நம் ஊர் நம் வீட்டோடு இருக்கட்டும். அதை விட்டுக்கொடுக்க முடியாது. 75 வருடங்களாக சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வைக் கோரிய தமிழினம் உள்ளூர் அதிகார சபை அதிகாரத்தை மத்திய அரசிடம் கொடுப்பது சரியா? அதன் பின் எங்களுடைய சமஷ்டிக் கோரிக்கை என்னவாகும்? இந்த அபாயத்தை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். மக்கள் தொடர்ந்தும் சமஷ்டியை வலியுறுத்தும் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். இறைமையைப் பிரயோகிக்கும் முதல் படியில் தெளிவாக மக்கள் வாக்களிக்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெற்ற அசம்பாவிதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இடம்பெற்றுவிடக்கூடாது. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் - என்றார்.

## தேசபந்துவிற்கு .....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கும்படி நீதியரசர் தலைமையிலான மூவர் குழு பதில் பொலிஸ் மா அதிப-ருக்கு அறிவுறுத்தியிருந்தது. அதற்கமையவே இந்த நால்வர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால விசாரணைகளைத் திட்டமிடுவது குறித்து விவாதிக்க நீதியரசர் தலைமையிலான குழு இன்று நாடாளுமன்ற வளாகத்தில் மீண்டும் கூடவுள்ளது.

இந்தக் குழு முன்னர் 23 மற்றும் 25 ஆம் திகதிகளில் கூடியது. விசாரணைகளை நடத்திய பிறகு, குழு தனது இறுதி விசாரணை அறிக்கையை சபாநாயகரிடம் சமர்ப்பிக்க உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி பேரினவாத சக்திகளின் ஓர் சூழ்நிலைக் கைதியாக இருக்கின்றார்

## ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் செயலாளர் கருத்து

(பாறுக் ஷிஹான்)

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காரைதீவு வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் காரைதீவு பொது நூலக கேட்போர் மண்டபத்தில் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் இந்த அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கம் ( குருபரன்) பிரதான பேச்சாளராக கலந்து சிறப்பித்தார்.ஈபிஆர்எல்எப் மத்திய குழு உறுப்பினரும் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான சிவசுந்தரம் புண்ணியநாதன்( கரன்) கலந்து சிறப்பித்தார்.

காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடும் பிரதான வேட்பாளர் ரவிச்சந்திரன் ( சங்கரி) உள்ளிட்ட வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

இறுதியில் ஊடகச் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி பேரினவாத சக்திகளின் ஓர் சூழ்நிலை கைதியாக இருக்கின்றார் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கம் ( குருபரன்) தெரிவித்தார்.

காரைதீவு பொது நூலக கேட்போர் மண்டபத்தில் புதன்கிழமை மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதி பேரினவாத சக்திகளின் ஓர் சூழ்நிலை கைதியாக இருக்கின்றார்.இதுவரை ஜனாதிபதியை விமர்சிப்பதற்கான எந்த சந்தர்ப்பமும் எமக்கு கிடைக்கவில்லை.இந்த நாட்டில் எந்த ஜனாதிபதியாக வந்தாலும் இவ்வாறு சூழ்நிலை கைதியாகவே இருப்பார்.அத்துடன் ஜனாதிபதி செய்வார் என எதிர்பார்த்த எந்தவொரு விடயங்களையும் அவர் செய்யவில்லை. எனவே அவர் பொய் தான் பேசுகிறார் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

எங்களது உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கும் ஜனாதிபதி மாதிரி பொய் வாக்குறுதிகளை எமது மக்களுக்கு பிரச்சார வேளையில் வழங்க வேண்டாம் எனத் தெளிவாக அறிவுறுத்தியுள்ளோம்.மக்கள் இவ்வாறான பொய் வாக்குறுதிகளால் தான் சலித்து போய் உள்ளனர்.எமது வடக்கு கிழக்கில் தமிழ் தேசிய அரசியல் வீழ்ச்சிக்கு காரணம் கொள்கைகள் அல்ல.தவறான வாக்குறுதிகளும் வாக்குறுதிகளை மீறியமையும் ஆகும். - என குறிப்பிட்டார்.

குறித்த பாடசாலையின் வரலாற்றில் மாணவன் ஒருவன் முதலாம் இடத்தை பெறுவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. 100

# மாற்றுத் திறனாளிகளின் சுய உதவிக் குழுக் கூட்டம்

## தம்பலகாம பிரதேசத்தில் நடந்தது

(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச மாற்றுத் திறனாளிகளின் சுய உதவிக் குழு கூட்டம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி வழிகாட்டலில் பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது, சுய உதவி குழுக்களை எவ்வாறு வலுப்படுத்துவது, அவர்களின் வருமான மட்டத்தை எவ்வாறு அதிகரிப்பது மற்றும் மாற்றுத்திறனாளி சமூகத்தின் மனித உரிமைகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் சுய உதவி குழுக்களின் கடந்த கால செயல்பாடுகள் மற்றும் எதிர்கால செயல்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

எதிர்வரும் தினங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ முகாம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தர் மூலமாக தெளிவூட்டல்கள் இடம் பெற்றன.

இதில் சமூக சேவைகள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் த.பிரணவன், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் நஸ்ரின் திலானி மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சித்திரைவருட கொண்டாட்டங்கள்

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் புதுவருட நிகழ்வு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

பொது மக்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. மரதன் ஓட்டம், சைக்கிள், ஓட்ட போட்டி, முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்கதிபர் எஸ்.முரளீதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேற்படி நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், பொலிஸ் அதிகாரிகள், பொது மக்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர். 316









காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வறட்சியின் மத்தியில் தண்ணீர் மேலாண்மை

**இலங்கை தற்போது கடும் வெப்பத்தையும் வறட்சியையும் எதிர்கொண்டு வருகிறது. பெரும்பாலானமாவட்டங்களில்குடிநீர்பற்றாக்குறை தீவிரமடைந்து, மக்களின் அன்றாட வாழ்வை கடுமையாக பாதிக்கத் தொடங்கியுள்ளது. விவசாய நிலங்களில் காய்கறிகள் வாடி வீழ்ந்துள்ளன. குடிநீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகின்றனர். இந்நிலையில், தண்ணீர் மேலாண்மையைப்பற்றிய முக்கியத்துவத்தை நாம் மறந்து விட முடியாது.**

**இன்று நாம் எதிர்கொள்வதற்குக் காரணம், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டமற்ற நீர்த்தேக்க நடவடிக்கைகளும், தண்ணீர் பாதுகாப்பில் காட்டிய அலட்சியமும் ஆகும். பெரும் மழைக்காலங்களில் கூட நாம் மழைநீரை சேமிக்க மறந்துவிட்டோம். குடிநீர் கிணறுகள் பராமரிக்கப்படாமல் விட்டுவிடப்பட்டன. நிலத்தடி நீர் அளவைக் கண்காணிக்கும் முறைகள் சீராக நடைபெறவில்லை. இவை அனைத்தும் சேர்ந்து இன்றைய தண்ணீர் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளன.**

**எனவே, தற்போதுதுரிதமாகவும், திட்டமிடலோடும் செயல்படவேண்டும். மழைநீர்சேகரிப்புதிட்டங்களை ஊக்குவிக்க வேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் சிறிய நீர்த்தேக்கத் திட்டங்களை உருவாக்கவேண்டும். நீர்ப்பாசனவாய்க்கால்களை சீரமைத்து, தண்ணீரின் வீணாகாமல் செல்லும் பாதையை கட்டுப்படுத்த வேண்டும். குடிநீரின் பயன்பாட்டை முறையாக ஒழுங்குபடுத்தும் விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.**

**அதே நேரத்தில், பொதுமக்களிடையே தண்ணீர் சிக்கனமாகப்பயன்படுத்தும்பழக்கத்தைவளர்க்கும் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பள்ளிகளில் இருந்து ஆரம்பித்து, வேலைப்பளு இடங்களுக்கே ஆழமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இன்று நாம் எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையும் எதிர்காலத்தில் உயிர்க்காவலாக அமையும்.**

**வறட்சியை குறைப்பது இயற்கையின் வேலை என்றாலும், அதன் தாக்கங்களை தணிக்க மக்கள் மற்றும் அரசாங்கம் இணைந்து செயல்படவேண்டும். தண்ணீர் மேலாண்மை ஒரு பரபரப்பான வார்த்தையாக இல்லாமல், நம் வாழ்வின் அங்கமாக மாற வேண்டும். இல்லையெனில், எதிர்கால சந்ததிகள் அதிக பெரிய ஆபத்துகளை எதிர்கொள்வதற்குத் தயார் ஆக வேண்டும்.**

# புதிய சட்டங்களை உருவாக்கி இனவாதத்தைக் களைவோம்

## திஸ்ஸவிகாரை விடயத்திலும் இனவாதமே என வவுனியாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



திஸ்ஸவிகாரை பிரச்சணையில் இருப்பது இனவாதம். இந்த பிரச்சனையைத் தீர்க்க முடியும். தற்போது உள்ள சட்டங்கள் இனவாதத்தை ஒழிக்கப் போதாது. சட்டங்களை புதிதாக உருவாக்கி இனவாதத்தை களைவோம் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகரசபை மைதானத்தில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

எமது பரம்பரை யுத்தம் செய்தது. ஆனால் அடுத்த பிள்ளைகளின் பரம்பரைக்கும் அதனை விடமாட்டோம். பிரிவினைவாத அரசியல் முடிவிற்கு வந்தது. இழந்த ஒற்றுமையை நிச்சயம் கட்டி எழுப்புவோம். இனவாதத்தை இல்லாமல் செய்து தேசிய ஒற்றுமையை வளர்ப்போம்.

வடக்கில் பல இடங்கள் போரால் பாதிக்கப்பட்டது. வீடுகளை இழந்தனர். பாதைகளை இழந்தனர். தாய்மார்கள் பிள்ளைகளையும், கணவர்களை மனைவிமாரும் இழந்தார்கள். நண்பர்களை இழந்தனர். கவலையான பாரிய ஒரு நிலைமை தான் இருந்தது. அதுதான் யுத்தம். தற்போது போர் முஷ்டிந்து 16 வருடங்கள் கழிந்துள்ளது. இன்னும் அதன் மிச்ச சொற்பங்கள் இருக்கின்றன.

யாழில் திஸ்ஸவிகாரை தொடர்பாக ஒரு பிரச்சினை இருக்கிறது. அது என்ன பிரச்சினை. அந்த காணிகளின் உரிமையாளர்களும், பன்சாலையின் பிக்குமாருக்கும் அந்த பிரச்சினையை தீர்க்க இடமளித்தால் அவர்கள் தீர்த்துக் கொள்வார்கள். தீர்க்க இடமளிக்காமல் இருப்பது அரசியல். அவர்களுக்கு தேவை இதனூடாக இனவாதத்தை தூண்டுவது. இதன் காரணமாகவே தீர்க்க முடியாமல் உள்ளது.

வடக்கின் தோல்விகண்ட அரசியல்வாதிகள் அந்த இடத்திலே ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்த முனைகின்றனர். தென் பகுதியில் தோல்வி கண்ட அரசியல் தலைவர்கள் அங்கே ஒரு முரண்பாட்டை ஏற்படுத்த முனைகிறார்கள். நாங்கள் காணி உரிமையாளர்கள், பிக்குமார்கள் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவோம். இந்த பிரச்சினையை தீர்க்க முடியும். தற்போது உள்ள சட்டங்கள் இனவாதத்தை ஒழிக்கப் போதாது. சட்டங்களை புதிதாக உருவாக்கியாவது இனவாதத்தை களைவோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் உருவாக்கப்படும். தமிழ் பேசும் திறமையானவர்களை இலங்கை கிரிக்கெட் அணியில் இணைக்க வேண்டும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து இருந்து அந்த இடத்தில் விளையாடும் இலங்கை அணியை ஊக்கிவிக்க வேண்டும். அதனை நாம் ஏற்படுத்துவோம்.

தேர்தல் காலங்களின் போது தேர்தல் அலுவலகங்களை தீயிட்டு எரித்தமை தொடர்பாக நாங்கள் கேள்விபட்டிருக்கிறோம். ஆனால் யாழில் நூலகத்தை எரித்தார்கள். உலகில் எங்கும் அப்படி நடக்கவில்லை. நாங்கள் அதற்கு 10 கோடிகள் ஒதுக்கியுள்ளோம்.

போரின் பின்னர் கூகுள் வரைபடத்தைப் பார்த்தே வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் மக்களின் காணிகளை எடுத்தார்கள். அந்த காணிகளை நேரடியாக சென்று பார்த்து அதனை அளந்து எடுக்கவில்லை. காடாக இருக்கும் காணிகளை பார்த்தார்கள் எடுத்தார்கள். மக்களின் காணிகள் அதற்குள்ளே இருக்கிறது. விவசாய காணிகள் உள்ளது. குளங்கள் உள்ளது. எனவே மீண்டும் அதனை ஆய்வு செய்து அனைத்து காணிகளும் இந்த மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம்.

நெற் களஞ்சியசாலைகள் பல உள்ளது. நெல் கொள்வனவுக்காக நாங்கள் 500 கோடிகள் வழங்கினோம். ஒரு விலையையும் நிர்ணயித்தோம். அந்தவிலையை விட குறைந்தால் எங்களுக்கு தாருங்கள். விலை கூடினால் தனியாருக்கு வழங்குங்கள் பரவாயில்லை. நெல் விலை குறைந்தால் அரசு கொள்வனவு செய்யும். கூடினால் அவர்கள் எடுப்பார்கள். அந்த முறையை நாங்கள் செய்தோம். இந்த போகத்தில் நெல் விலை குறைந்ததா. இனி ஒரு போதும் நெல் விலை குறையாது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இப்படி ஒரு மாற்றம் வரும் என அரசியல்வாதிகள் எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதி என்பது பரம்பரையான ஒன்று என இருந்தார்கள். தந்தை, மகன், பேரன் என போட்டியிட்டார்கள். பதவியில் இருந்தார்கள். ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தம்புதேகமவில் இருந்து ஒரு மக்கள் சார்ந்தவன் வந்துள்ளான். உண்மை தானே. இதை பலரும் எதிர்பார்க்கவில்லை. குழம்பி போயுள்ளார்கள்.

2000 பொலிஸாருக்கு வெற்றிடங்கள் உள்ளன. அதில் தமிழ் மொழி பேசும் பொலிஸாரை அதிகமாக உள்வாங்க உள்ளோம். குறைந்தது 500 பேராவது தமிழ் பேசுபவர்கள் இணைய வேண்டும். ஆனால் பொலிஸ் சேவையில் இணைய தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு பெரிதாக விருப்பம் இல்லை. ஆனால் அது நல்ல தொழில் தானே. நீதியுடன் தொடர்புடையது. நல்ல சம்பளம் வரும். எனவே தமிழ் இளைஞர், யுவதிகள் அதில் இணைய வேண்டும். நாடும் பூராகவும் 30 ஆயிரம் அரச நியமன்களையும் வழங்குவோம். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும.

ஜனாதிபதி தேர்தலை விட நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை வழங்கினார்கள். தற்போது உள்ளூராட்சி சபைகளை சுத்தம் செய்ய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். 100

## மாவடிப்பள்ளி அஷ்ரப் மகா வித்தியாலயத்தில்

# 13 வருடங்களின் பின்னர் நடந்த இல்ல விளையாட்டுப் போட்டி

## சம்பியனானது சபா இல்லம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி கல்முனை அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி 13 வருடங்களின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை யூ.கே முஹம்மது நஜீப் மற்றும் எம்.எஸ்.எம். அசீம் ஆசிரியர்களின் நெறியாள்கையில் பாடசாலை அதிபர் ஏ.எல். ரஜப்டீன் தலைமையில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் கௌரவ அதிதிகளாக நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், பிரதி கல்வி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வி. சாந்தரூபன், கோட்டக்கல்வி பணிப்பாளரும், பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ஏ. சன்ஜீவன், உடற்கல்விக்கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எல். எம். முதர்ரீஸ், ஆசிரிய ஆலோசகர் ஏ.எம். அன்சார், இப்பாடசாலையின் ஓய்வு நிலை முன்னாள் அதிபர் எம்.எஸ்.எம்.சைபுதீன், அதிபர் வி.எம். ஸம்ஸம், எச்.எம்.எம். அனீஸ் மற்றும் ஏனைய பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் அபிவிருத்தி குழு சங்க செயலாளர் உட்பட அதன் உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் உட்பட அதன் உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலைமுன்றிலில்இல்லவிளையாட்டுப் போட்டியின் நினைவாக பிரதம அதிதியின் கரங்களால் மரம் ஒன்று நடப்பட்டது. சிறப்பாக நான்கு தினங்களாக இடம்பெற்ற இப் போட்டியில் 386 புள்ளிகளை பெற்று சபா இல்லம் முதலாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.





போட்டிகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கான வெற்றி கிண்ணங்கள் அதிதிகளினால்வழங்கிவைக்கப்பட்டுள்ளதுடன் மூன்றாம், இரண்டாம் இடங்களை பெற்றுக்கொண்ட இல்லங்களுக்கானவெற்றிக் கிண்ணங்கள் கௌரவ அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டு இறுதியாக 2025 ஆம் ஆண்டு அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியின் முதலாம் இடத்தை பெற்ற சபா இல்லத்துக்கான வெற்றி கிண்ணம் பிரதம அதிதி எம்.எஸ். சஹ்துல் நஜீம் அவர்களின் கரங்களால் வழங்கி வைக்கப்பட்டது.

# வவுனியாவில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண்வதற்கு உதவுக

வவுனியா, நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை புளியங்குளம் குளத்தில் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண உதவுமாறு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

வவுனியா- இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம்- நேரியகுளம் வீதியில் உள்ள தம்பனை புளியங்குளம் பகுதியில் இருந்து கடந்த முதலாம் திகதி சடலம் ஒன்று மீட்கப்பட்டிருந்தது. குறித்த சடலம் 40 வயதிற்கு மேற்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மரணமடைந்து 10 - 15 நாட்களுக்கு பின்னரே குறித்த சடலம் மீட்கப்பட்டிருந்தது.

நீல கலர் கோடு போட்ட சேட்டு அவரது சடலத்தில் அருகில் கண்டு பிடிக்கப்பட்டது. உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் சடலத்தை பற்றிய மேலதிக அடையாளங்களை பெற முடியவில்லை. வவுனியா வைத்தியசாலையில் உள்ள பிரேத அறை குளிரூட்டி இயங்காமையால் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இதனை அடையாளம் காண உதவுமாறு கோருவதுடன், அவ்வாறு இல்லாவிடின் அரச செலவில் குறித்த சடலத்தை நல்லடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறித்த வயதை கிட்டிய நபர்கள் எங்காவது காணாமல் போயிருந்தால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தின் 0718592778 அல்லது 0242054286 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். 100





# உள்ளாட்சி தேர்தல் 2025

## தேசிய மக்கள் சக்தி வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெண்களின் வாழ்வாதாரத்திற்காக வந்த நிதியில் மோசடியாம்

### ஜனாதிபதி பொறுப்பு கூறுவாரா என சாணக்கியன் எம்.பி கேள்வி

வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது. அவர்கள் அரச ஊழியராக இருந்த போது பெண்களுக்கான வாழ்வாதாரத்திட்டத்திற்காக வந்த நிதியை மோசடி செய்ததாக குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. விசாரணை செய்யப்பட்டுள்ளது. இவை தொடர்பாக ஜனாதிபதி பொறுப்புக் கூறுவாரா என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா, புளியங்குளத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் ஓரணியாக நின்றால் மாத்திரமே எமக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு இந்த நாட்டிலே வரும் என்ற நம்பிக்கையில் வாழ முடியும். இல்லை என்றால் பலமிழந்த ஒரு சமூகமாகவே நாங்கள் தொடர்ந்தும் இருப்போம். தமிழரின் இருப்பைதக்கவைத்துக்கொள்வதற்காக தமிழரசுக்கட்சி மாத்திரே இன்று நேர்மையாக செயற்ப்பட்டு வருகின்ற ஒரு கட்சி. அதற்கு பல உதாரணங்களை கூறலாம்.

எங்கள் பிரச்சினைகள் பற்றி சர்வதேச சமூகத்திடம் நாங்கள் மாத்திரமே குரல் கொடுக்கிறோம். அண்மையில் வருகை தந்த பாரத பிரதமரை நாம் சந்தித்தோம். அவரை சந்திப்பதற்கு எமது கட்சியை சேர்ந்தவர்களும், ஏனைய தமிழ்த் தேசிய பிரதிநிதிகளையும் மக்கள் நாடாளுமன்றம் அனுப்பாவிட்டால் அவரை சந்திக்கும் அரசின் குழுவில் சிங்களவர்கள் மாத்திரமே அங்கம் வகித்திருந்தார்கள். அவர்கள் அந்த ரவுடி அமைச்சரையாவது கொண்டு போயிருக்கலாம்.

அண்மையில் முல்லைத்தீவில் மீனவ சங்கத் தலைவர் மீது ரவுடி அமைச்சரின் கும்பல் பலமான தாக்குதலை செய்திருக்கின்றது. அவரது அடாவடித்தனத்தை காட்டியும் வன்னி மண்ணில் அடிவாங்காமல் போயுள்ளார் என்றார் அமைச்சர் என்ற பதவிக்கு அந்த மக்கள் மரியாதை கொடுத்துள்ளனர்.

இந்த ரவுடி அமைச்சரின் தலைவரான ஜனாதிபதி மாங்குளம் சென்றிருந்தார். அங்கு ஒரு தொழிற்பேட்டை வலயம் ஒன்றை அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் நாடாளுமன்றில் வரவு செலவு திட்ட விவாதத்தில் மாங்குளம் என்ற வார்த்தையே வரவில்லை. எனவே தேர்தலுக்காக சொல்லும் பொய் வார்த்தைகளே இவை.

சிங்கள மக்களும் ஜனாதிபதி சொல்வது போல ஒரு தாய் பிள்ளைகளாக வாழலாம் என்ற மன நிலையில் இருப்பதாக நான் நம்பவில்லை. இனவாதிகளான கோட்டாபய அரசாங்கம் தங்களுடைய இனவாத பணியை சரியாக செய்ய தவறியமையாலே இன்று இந்த இனவாதிகளுக்கு அந்த மக்கள் வாக்களித்துள்ளனர்.

கோட்டாவை விட மோசமான இனவாதிகள் இவர்கள். சிங்கள பேரினவாத நாடாக தொடர்ந்து இலங்கையை வைத்திருப்பதே அவர்களது எண்ணம். அதற்கு தடையாக இருப்பவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியை சேர்ந்தவர்களே.

இதனை மக்கள் மனதிலே வைத்திருக்க வேண்டும்.



எதிர்வரும் தேர்தலில் அதனை வெளிப்படுத்த வேண்டும். மக்களின் ஆதரவு எமது கைகளுக்கு வந்தால் மாத்திரமே நாங்கள் செய்யும் போராட்டம் வலுவானதாக இருக்கும்.

ஊழல்வாதிகள் இல்லாத அரசு என்றார்கள். வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது. அவர்கள் அரச ஊழியர்களாக இருந்த போது பெண்களுக்கான வாழ்வாதாரத்திட்டத்திற்காக வந்த நிதியை மோசடி செய்ததாக குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. விசாரணை செய்யப்பட்டுள்ளது.

இது போல பல விடயங்களை நான் நாடாளுமன்றிலே தெரிவித்துள்ளேன். ரவுடியாக செயற்படும் அமைச்சர்கள் உள்ளனர். எனவே ஜனாதிபதி இதற்கெல்லாம் பொறுப்புக்கூறாவிட்டால் இந்த தேர்தலில் இந்த அரசு தோல்வியடைவதை எவராலும் மாற்ற முடியாது. – என்றார்.

100

## ஆளும் தரப்பிடம் வவுனியா வடக்கு பிதேச சபை ஆட்சி அதிகாரம் போதுமாகவிருந்தால் இனப்பரம்பலை இலகுவாக மாற்றியமைப்பர்

### தமிழ் அரசு செயலாளர்.சுமந்திரன் காட்டம்

மத்தியிலே ஆளும் தரப்பிற்கு வவுனியா வடக்கு பிதேச சபையின் ஆட்சி அதிகாரம் போதுமாக இருந்தால் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வேலையை இலகுவாக நடைமுறைப்படுத்துவார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா புளியங்குளத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வவுனியா வடக்கில் போருக்கு பின்னர் கடும் வேகத்தில் குடியேற்ற செயற்பாடுகள் நடைபெறுகின்றன. வவுனியா வடக்கு பிரதேச சபையில் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழரசுகட்சி ஆட்சியமைப்பதற்காக நாம் பல்வேறு செயற்பாடுகளை எடுத்திருந்தோம்.

இன்று நிலைமை மாறியிருக்கிறது. நாட்டிலே ஆட்சி செய்யும் ஓர் அமைப்பு இந்த பிரதேச சபையை கைப்பற்றுவதற்கு போட்டியிடுகின்றது. எனவே மத்தியிலே ஆளும் தரப்பிற்கு இந்த பிதேச சபையின் ஆட்சி அதிகாரம் போதுமாக இருந்தால் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வேலையை இலகுவாக நடைமுறைப்படுத்துவார்கள்.

நாடாளுமன்றில் எங்களுக்கு அடுத்தபடியாக இருந்த ஒரு கட்சி இன்று தேர்தல் மூலம் தனிப்பெரும்பாண்மைபெற்றுஆட்சிஅமைத்துள்ளது. ஊழல், துஸ்பிரோயகம் என்று மாறிமாறி ஆட்சிசெய்த தரப்பின் மீது மக்களுக்கு வெறுப்பு இருந்தது. எனவே அவர் 42 சதவீதம் வாக்குகளை எடுத்திருந்தாலும், மாற்றம் வருகின்றது என்ற எதிர்பார்ப்பிலே அடுத்து வந்த நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பலத்தை மக்கள் கொடுத்தனர்.

அந்தவகையில் சாணக்கியனின் தனி முயற்சியால் கிழக்கு தப்பிவிட்டது. துரதிஸ்ட வசமாக வடக்கிலும் அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் எப்படியான முடிவு நாடாளுமன்ற தேர்தலில் வந்திருந்தாலும் அங்கு மூன்றாவது பெரிய கட்சியாக இருப்பது தமிழரசுக் கட்சியே. ஒரு குடியும் மூழ்கி போகவில்லை. குறைந்திருக்கிறது தான். ஆனாலும் நாங்கள் தான் இன்றும் பிரதான தமிழ்க் கட்சி. அதில் மாற்றம் இல்லை.



தேர்தல் முறைமையால் ஏற்பட்ட பிரதிபலனை வைத்து தமிழ் மக்களின் ஆணையும் எங்களுக்குத்தான் இருக்கிறது. ஆகவே தமிழ்த் தேசிய பிரச்சினையை தாங்கள் பார்த்து கொள்வோம் என்று கூறும் அவர்கள் அதிகாரப் பகிர்வில் நம்பிக்கை இல்லாதவர்கள். வடக்கு - கிழக்கு இணைப்பையும் பிரித்தவர்கள். அவர்கள் தமிழர்களின் ஆணை எங்களிடம் தான் இருக்கிறது என்று சொன்னால் அதைவிட அபத்தம் வேறு எதுவுமில்லை. அதைவிட மோசமான ஆபத்து எதுவும் கிடையாது. அந்த ஆபத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

எனவே நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னரான முதலாவது சந்தர்ப்பம் இந்த உள்ளூராட்சி தேர்தல். இதில் தான் அதனை புறந்தள்ள முடியும். எமக்கு ஒற்றை ஆட்சியிலே இணக்கமில்லை. முறையான அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும். என்ற கோரிக்கைகளின் உறுதியான மக்கள் தீர்ப்பு தேர்தல்களில் இருந்தே வருகின்றது.

எனவே, கடந்த தேர்தல் மயக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அதனை களையக்கூடிய முதலாவது சந்தர்ப்பமாக இது உள்ளது. உள்ளூரின் ஆட்சியை கூட நாங்கள் தக்கவைக்க முடியாவிட்டால் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று பரப்புரை செய்யக்கூடும். எனவே நாட்டுக்கும் உலகுக்கும் தெளிவான ஒரு செய்தியை சொல்லக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இது. அதனை நாம் நழுவ விடக்கூடாது.

எங்களுக்கு தேவை தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசை அப்பிடியே தான் இருக்கிறது. அதில் மாற்றம் இல்லை. அதை சொல்லுவது எப்படி. வாக்குகளை சிதறடித்துவிட்டு சொல்ல முடியாது.

எனவே அதனை ஒருமுகப்படுத்தி சமஸ்டி என்ற ஒரே நிலைப்பாட்டில் இருக்கும் தமிழரசுகட்சிக்கு அந்த வாக்குகளை கொடுத்தால் எங்கள் அரசியல் நிலைப்பாட்டில் ஓர் உறுதி இருக்கும். எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்ற கனமான செய்தி சொல்லப்படும். அது கேட்கப்படும். அதுவே பலமானதாக இருக்கும். - என்றார். 100

காலைக்கதிர் Kalaikkathir

# நாவிதன்வெளியில் பாரம்பரிய விளையாட்டு விழா

(ஹாரீஸ்)

தமிழ் சிங்கள புது வருடம் மற்றும் ஈஸ்டர் தினங்களை முன்னிட்டு நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கான பாரம்பரிய விளையாட்டு விழா கடந்த 23 ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் இடம்பெற்றது.





நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ரீ. கிருபைராஜா ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இவ்விளையாட்டு நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சகல பிரிவுகளின் உத்தியோகத்தர்களும் இதில் பங்கு பற்றியிருந்தனர்.

இந்நிகழ்வின் போது பாரம்பரிய விளையாட்டுக்களான பெண்களுக்கான சமநிலை ஓட்டம், கிடுகு பின்னுதல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் தண்ணீர் நிரப்பிய பலூனை பிடித்தல், பனிஸ் சாப்பிடுதல், சாக்கோட்டம், மர்ம மனிதன், சங்கீதக் கதிரை, யானைக்கு கண் வைத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன.

இந்நிகழ்வின்போது 2025ஆம் ஆண்டுகிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலானபோட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றி வெற்றியீட்டிய கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்நிகழ்வில் நிதிப் பங்களிப்பு மற்றும்சீரஉதவிகள் போன்றவற்றைசிறப்புற வழங்கிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் நன்றியினை தெரிவித்ததுடன் இத்தகைய நிகழ்வுகள் மூலம் உத்தியோகத்தர்கள் இடையே நல்லுறவு கட்டியெழுப்பப்பட வாய்ப்பு ஏற்படுத்துப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.






# பொன்னர் சங்கர் கூத்தின்போது கம்பமரம் ஏறியவர் வீழ்ந்து சாவு

(கேதீஸ்ல்



நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற பொன்னர் சங்கர் நாடகத்தின் இறுதி நிகழ்வான கம்ப மரம் ஏறும் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்றபோது அந்த கம்ப மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து உயிழந்துள்ளார் என நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தைச் சேர்ந்த எம்.சதாசிவம் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் சனிக்கிழமை இரவு ஆரம்பிக்கப்பட்ட பொன்னர் சங்கம் கூத்து மறுநாள் முடியும் தருவாயில் திறந்தவெளியில் தயார் செய்யப்பட்டிருந்த 50 அடிக்கு அதிகமான உயரமான மரக்கட்டையில் இணைக்கப்பட்ட மர ஏணியில் (கம்ப மரம்) ஏறிய நபர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் ஆண்டுதோறும் இந்த பொன்னர் சங்கர் கூத்து நடத்தப்படுவதாகவும், இரவு முழுவதும் நடந்த நாடகத்தின் பின்னர் காலையில் பொது வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் கம்ப மரத்தில் பெரிய காந்தி எனும் கதாபாத்திரம் அதில் ஏறி சில நிமிடங்கள் தவம் செய்து பூஜை செய்ததன் பின்னர் அதிலிருந்து இறங்குவார் என்றும் அதுபோலவே குறித்த நபர் மரத்தில் ஏறியபோது மரத்திலிருந்து தவறி கீழே வீழ்ந்து உயிரிழந்தமை நானுஓயா பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கம்ப மரத்திலிருந்து விழுந்த நபர் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும், ஆனால் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






## மாகாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடு. மாகாணசபைத்தேர்தல்நடத்தப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஒரு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினால் போதுமானது. இதற்கான பிரேரணையை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையே போதுமானது. குறித்த பிரேரணையை ஆளுங்கட்சியே செய்யவேண்டும்என்றில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் கொண்டு வரலாம் என்று குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலை இவ்வருட இறுதியில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர்விமல்ரத்நாயக்கவும்அண்மையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அது அடுத்த வருடமே இடம்பெறும் என்று வேறு அமைச்சர்கள்சிலர்கருத்துத்தெரிவித்துள்ளனர்.

## ஐந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை இறப்பு பகுப்பாய்வை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளில் இந்த நடவடிக்கை ஒரு முக்கிய பகுதியாகும் என்று அமைச்சகம் வலியுறுத்தியது.

இளம் குழந்தைகளிடையே இறப்புக்கான பொதுவான காரணங்களைக் கண்டறிந்து, அத்தகைய இறப்புகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை செயல்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என்று மூத்த அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஆளும்தரப்பின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தும் எழுந்ததாகவும், முன்னாள் ஜனாதிபதிகள் ரணசிங்க பிரேமதாச மற்றும் மஹிந்தராஜபக்ஷஆகியோர்தலதாவிபாசனை நடத்தியபோது மூன்று மாதங்களுக்கு முன்பே தயாராகிவிடுவர் என்றும்லக்ஸ்மன்கிரியெல்ல மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளைதலதாயாத்திரை இடம்பெற்ற இந்தப் பத்து நாட்களில், பக்தர்கள் 600 டன் குப்பைகளை சட்டவிரோதமாக சுற்றுச்சூழலில் கொட்டியுள்ளனர் என்று கண்டி நகராட்சி மன்றத்தின் திடக்கழிவு பிரிவின் தலைவரும் நீர் தொழிற்சாலைகளின் தலைமைப் பொறியாளருமானநாமல்தம்மிக்கதிசாநாயக்க கூறினார்.

சுமார் 3.5 மில்லியன் பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்கள் சுற்றுச்சூழலில் கொட்டப்பட்டுள்ளதாகவும் நாமல் தம்மிக்க கூறினார்.

"நகரத்தின்பல்வேறுஇடங்களில்குப்பைகள் சட்டவிரோதமாக கொட்டப்பட்டதால், நகராட்சி மன்ற ஊழியர்களும், நகரத்தை சுத்தம் செய்ய தன்னார்வத் தொண்டர்களும் பெரும் சிரமத்திற்கு ஆளானார்கள். சிலர் பைகளில் மலத்தை கூட வீசியிருந்தனர், சிலர் தண்ணீர் பாட்டில்களில் சிறுநீர் கழித்திருந்தனர், நகரத்தின் பல்வேறு இடங்களில் அவற்றை வீசி எறிந்திருந்தனர்" என்றும் திசாநாயக்க கூறினார்.

தலதா விஸ்டாவின் கடைசி நாளான நேற்று நண்பகல் 12.00 மணிக்குள் 528 டன் குப்பைகள் குஹாகொட குப்பை கிடங்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், தலதாவிஸ்டாவின் முடிவில்அது 600 டன்குப்பைகளைதாண்டும் என்றும் நாமல் திசாநாயக்க கூறினார்.

# வயல் பகுதியிலிருந்து ஆணின் கடலம் மீட்பு

(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்டம் எருவில் கிராமத்தில் சனிக்கிழமை மாலை வயல் பகுதியிலிருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்டுள்ளார் என பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் எருவில் கிராமத்தை சேர்ந்த 44 வயதுடைய இரத்தினசிங்கம் உத்தமன் என அடையாளர் காணப்பட்டுள்ளார்.

சனிக்கிழமைஅப்பகுதியில்அமைந்துள்ள அவரது வயலுக்குள் வேளாண்மையினை பார்ப்பதற்காக சைக்கிளில் சென்றுள்ளார். சைக்கிளைக் குளக்கட்டில் வைத்துவிட்டு வயலுக்குள் இறங்கி தனது வேளாண்மைச் செய்கையை பார்வையிட்டுள்ளார். அப்போது அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக வயலுக்குள்ளேயேமரணம்அடைந்திருக்கலாம் என உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக களுவாஞ்சிகுடி பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரிவி.ஆர்.மகேந்திரன், சடலத்தை பார்வையிட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உடல்கூற்று பரிசோதனை முடிவுகளின்படி மாரடைப்பு காரணமாக குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்பு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





# திக்கம் வடிசாலை விவகாரத்தில் ஈ.பி.டி.பியினர் உருத்திராட்சப் பூனை போல் நடிக்கின்றனர்

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் குற்றச்சாட்டு

(சுபேசன்)

திக்கம் வடிசாலை விவகாரத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் உருத்திராட்சப் பூனை போல்(எலி பிடிக்காத பூனையாக) நாடகம் போடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

திக்கம் வடிசாலை விவகாரம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; -

திக்கம் வடிசாலை விவகாரத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அநீதியுடன் தொடர்புடையவர்கள். அவர்கள் தற்போது நன்மைகள் நடக்கும் போது அமைதியாக இருக்க வேண்டும். அல்லது தாம் செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் தேட ஏதாவது நன்மைகளைச் செய்ய முன்வர வேண்டும்.

ஆனால் இவர்களை அவற்றைத் தவிர்த்து திக்கம் வடிசாலை விவகாரத்தில் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது அறுதி என்ற நிலையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஈபிடிபி கட்சியினர் மக்களின் சொத்து மக்களுக்கே கிடைக்கவேண்டும்என்றகொள்கைஉடையவர்களாக இருந்திருந்தால் 2000 ஆம் ஆண்டில் இருந்து நீறு பூத்த நெருப்பாக இருக்கும் இவ் விடயத்தை பாரா முகமாக இருந்திருப்பார்களா?

கடந்த காலத்தில் திக்கம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அத்தனை முறைகேடுகளும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும்.



தற்போது நாம் நன்மைகள் செய்ய விளையும் போது தாம் உருத்திராட்சப் பூனைகள் போன்று நாடகம்போடுவதைஏற்றுக்கொள்ள முடியாது.

அண்மையில் என்னால் கைதடியில் இருந்து திக்கம் வரை மேற்கொள்ளப்பட்ட நடைபயணம் அரசியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதில்லை. பனை அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர் சபை எடுத்த பனை தென்னை வள சங்கங்களுக்குச் சாதகமான தீர்மானங்களை நான் நடைபயணமாக கொண்டு சென்று வழங்க வேண்டிய அவசியமும் இல்லை.

இருப்பினும் பனம் தொழிற்துறையின் பெருமையையும்-திக்கம் வடிசாலை விவகாரத்தையும் மக்கள் அறிய வேண்டும் என்ற விழிப்புணர்விற்காகவே 32கிலோமீற்றர் நடைபயணம் செய்து தீர்மானத்தைத் தெரியப்படுத்தினேன்.

அத்தோடு எமது பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் கடந்த காலத்தைப் போன்று எடுபிடிகள் அல்லர். அவர்களுடைய ஆலோசனைகள் பெறுமதிமிக்கவை. அவர்கள் தீர ஆராய்ந்தே திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களுக்கு வழங்குவது என்ற தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

திக்கம் வடிசாலை தொடர்பாக தற்போது கருத்துச் சொல்பவர்கள் 25 வருடங்களாக மக்களுக்குச் செய்த உபத்திரவம் போதும்.

மக்கள் அவர்களை ஒதுங்கி இருக்கச் சொல்லிவிட்டனர்.

திக்கம் வடிசாலை விடயத்தை மீண்டும் அரசியலாக்க வேண்டாம்.

கடந்த காலங்களில் எனக்கு வந்த அச்சுறுத்தல்களுக்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

எதிர்காலத்திலும் அச்சுறுத்தல்கள் வரலாம்.அதனைக் கண்டு அஞ்சப்போவதில்லை.

திக்கம் வடிசாலை நாட்டினுடைய வளம்.நடக்கும் நன்மைகளுக்கு எவரும் தடையாக இருக்கக்கூடாது.

புதிய அரசாங்கத்தின் ஊழல் அற்ற கொள்கையின் வெளிப்பாடாகவே திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை ஈ.பி.டி.பியினர் உணர்ந்து ஒதுங்கி இருக்க வேண்டும்.

மக்கள் ஏற்கனவே உங்களை ஒதுக்கி வைத்து விட்டனர்.இந்தத் தேர்தலில் அடியோடு ஒதுக்குவார்கள் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# தேசியக் கட்சியில் ஏழு எம்.பிக்கள் வடக்கில் வருவதற்கு காரணம் தமிழ் அரசு கட்சியினரே

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

வடக்கில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசியக் கட்சியில் வருவதற்கு தமிழரசு கட்சியே காரணம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈபிஆர்எல்எவ் அமைப்பின் செயலாளர் நாயகமுமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளரை ஆதரித்து பூந்தோட்டத்தில் குடியிருப்பு வட்டார வேட்பாளரை ஆதரித்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று வட மாகாணத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியில் வருவதற்கு காரணம் தமிழரசு கட்சியே ஆகும். அவர்களின் செயற்பாடு தான் இன்று ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டு வந்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஒரு ஜனாதிபதி இன்று உள்ளூராட்சி மன்றங்களையும் தங்களுக்கு தருமாறு கூறுவது எந்தவகையின் நியாயமாக இருக்கும். நாங்கள் எங்கள் பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கும், உங்களோடு வாழ்பவர்களுக்குமே உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்கை அளித்து ஆதரிக்க வேண்டும்.

நாங்கள் எங்களுடைய தமிழ் கட்சிகளை ஆதரிக்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் வாக்குச்சீட்டு என்பது வெறும் காகிதம் அல்ல. அது பல வலிகளையும் வேதனைகளையும் சுமந்த ஒரு விடயம். இத்தனை ஆயிரம் போராளிகளையும், மக்களையும் இழந்து விட்டு இன்று தேசிய கட்சி ஒன்றின் பின்னால் செல்ல முடியாது. அவ்வாறு இருக்குமாக இருந்தால் எமது போராட்டம் வீணானதாக இருக்கும் எனத் தெரிவித்தார். 100

# தமிழ் அரசு கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான பரப்புரைக் கூட்டம்





இலங்கை தமிழரசு கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான பிரசாரக்கூட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) புளியங்குளத்தில் இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வானது தமிழரசுக் கட்சியின் வவுனியா வடக்கு வேட்பாளர் த.தனுசன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளருமான சுமந்திரன் மற்றும் தமிழரசு கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபையின் வேட்பாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். 100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.04.2025இல் வெளியிடப்பெற்றது